உளி- 1| ஓசை-66 | செப்டம்பர்,அக்டோபர்-2022| திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
திண்டுக்கல் தமிழ்பித்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

முகமது பாட்சா - 4
சுப. முத்துக்குமார் - 5
வானம்பாடி - 6
கதிரவன் வீ - 7
அ.சீனிவாசன் - 7
மா. காளிதாஸ் - 8
தி.கலையரசி - 9
பிரபுசங்கர் க - 10
சந்துரு ஆர்.சி - 11
கா.ந.கல்யாணசுந்தரம் - 12
ச.ஜெய் - 12
தங்கேஸ் - 13
தமிழ்கவிராஜன் - 14
நட்சத்திரப்பாடகன் - 15
கோ. பாரதிமோகன் - 16
பூங்கோதை கனகராஜன் - 17
ச.ஆனந்தகுமார் - 18
ரிஸ்கா முக்தார் - 19
கா.ரஹ்மத்துல்லாஹ் - 20
ரா.ராஜசேகர் - 21
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 22
சுமைல் ஹாரீஸ் - 23
கோ.ஸ்ரீதரன் - 24
லக்ஷ்மி - 25
மயிலாடுதுறை இளையபாரதி - 25
ரத்னா - 26
சரண்யாசத்தியநாராயணன் - 27
சசிகலா திருமால் - 28
ஜனனி - 29
ராஜாஅபி - 29
மெகராஜ் பேகம் - 30
மு.முபாரக் - 30
பிரியா பாஸ்கரன் - 31
மகேஷ் சிபி - 32
ஐ.தர்மசிங் - 32
ஷிபானா அஸீம் - 33
மாலதி வெங்கடேசன் - 34
மகிழினி காயத்ரி - 35
அருஸா ஜெவாஹிர் - 36
கே.பாலன் வடக்கத்தியான்பட்டி - 37
காட்டுவா ராபி.மு - 38
ஆ.சார்லஸ் - 39
பவானி ரெகு - 39



**த**ன்னைத் தோல்களால் போர்த்துகிறாள்.
காய்களை நகர்த்தி
ஏணிக்காகக் காத்திருக்கும் ஆடையை
விழுங்கும் பாம்புகள் நாவை அசைக்கின்றன...
குறளியன் அவளைக் கிழித்து
விழுங்க...
வறுமை இரண்டாவது வாசலைத் திறக்கக் கேட்கிறது.
பகடையை உருட்டுகிறவர்கள்
அரசியலுக்கு அழைக்க....
மேல் மட்டம் கீழ் மட்டம் எல்லாம் அவளைக்
கைத் துழாவுகின்றன.
அவள் வியர்வைக்குப் பெயர் கண்ணீரென்று
அறியாதவர்கள்
அவள் அப்படித்தான் என்று சொல்லி
நழுவுகிறார்கள்....
ஜெயகாந்தனின் ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
அவள் ஜோல்னாப் பையில்!

♪ முகமது பாட்சா



முகம் கூடச்
சரியாகத் தெரியாத
உன் படத்தைப்
பார்த்துக் கொண்டே இருக்கிறேன்.
காலத்தின் வலுத்த குளம்புகள் என் மீது  ஓடிக்
கொண்டிருக்கின்றன.

எத்தனை மழை வந்தாலும்
மேவ இயலாத தடங்கள்
உன் விரல்கள் எழுதிச் சென்ற இசைக் குறிப்பு.

நீ மீன்களுக்கு இரையிடும்
குளத்தில் உறைந்திருக்கிற
பாசிப் படலம்
நம் நாட்கள்
களைந்து விடாமல் போய்விடு
நீ வராத போதினில்
மீன்கள்
கொறித்துக் கொள்ளட்டும்.

♪ சுப. முத்துக்குமார்



பெரும் சாபத்தில் புதைந்திருப்பவளிடம்
எதைத் தான் தேடுகின்றாய்

ஒரு சின்னப் புன்னகை
மிஞ்சிமிஞ்சிப்போனால் இனிக்கும் சிறு வார்த்தை

இவை தவிர
கொடுப்பதற்கு அவளிடம் எதுவுமில்லை
என்றான போதும்

எல்லைகள் தாண்டி
எதையோ தேடும்
உன் முயற்சிகள் மட்டும் முடிந்தபாடில்லை

பின்னாளில்
சோர்வுகள் புலப்பட
ஒன்றை வருத்தங்களோடு
அறிந்துகொள்வாய்

உருவம் அழிந்து
எலும்புகள் கரைய
மரணத்தை சுவைத்தவளுக்குள்
இனியும்
ஆச்சரியம் தரும் ஏதாவது
உண்டாயென...

♪ வானம்பாடி



**ம**லை உடைத்த கற்கள்
நதியில் சுரண்டிய மணல்
நீர் ஊற்றி கலவையென கலக்கிறாள் சித்தாள்

நீரை கண்டுவிட்ட மகிழ்வில் குழைந்து மகிழ்ந்து
இறுதியில் உறைய துவங்கியது இயற்கை

♪ கதிரவன் வீ

**வ**யலும் வயலைச்சார்ந்த இடம்
மலையும் மலையைச்சார்ந்த இடம்
காடும் காடைச்சார்ந்த இடம்
கடலும் கடலைச்சார்ந்த இடம்
இவற்றை மட்டுமே தான்
வைத்துக் கொண்டு
பசியும் பசியைச்சார்ந்த இடம்
மொத்தத்தையும் இல்லாதவர்க்கு
மொத்தமாக பட்டா போட்டுக்
கொடுத்துவிட்டார்கள்
பரந்த மனசுள்ள
பரம்பரை பணக்காரர்கள்!

♪ அ.சீனிவாசன்



குட்டையான குண்டான மாநிற
தையல் டீச்சருக்குப்
பொடி மூக்குத்தி மச்சம் தனி அழகு.

வட்டத்துணியில்
கைகளை நெளித்து நெளித்து
ஏதோவொரு பாடலை முணுமுணுத்தவாறே
பூ பின்னி முடிக்கும் போது
சுற்றிலும் சிந்தியிருக்கும் மகரந்தங்கள்.

யாரையும் எந்த வகையிலும்
தொந்தரவு செய்த
அந்தப் பாடவேளையில் வந்தமர
காலம் கைகட்டிக் காத்திருக்கும்.

ஆறுமாத விடுப்புக்குப்பின்
ஒல்லியாக உருத்தெரியாமல்
சவட்டிச் சவட்டிக்
கைத்தாங்கலாக நடந்து வந்தார்
தையல் டீச்சர்.

அதற்குப் பின்
அவர் பின்னிய எல்லாப் பூவிலும்
எட்டிப்பார்த்தது ஒரு பூநாகம்.

மா. காளிதாஸ்



**கோ**ரைப் பற்களுடன்
நாக்கை வெளியே நீட்டிக்கொண்டு
ரௌத்திர முகத்துடன்
காட்டெருமைத் தலையின் மீது
உச்சிப் படியில்
நின்று கொண்டிருக்கிறாள்
துர்கை.
அவளுக்கு கண்ணீரால்
அபிஷேகம் செய்து
பூஜிக்கிறார்கள்
வன்கொடுமைக்கு ஆளாகிய
பெண்கள்.
வேண்டுதலை ஏற்று
வாளைச் சுழற்றுகையில்
லாவகமாகத் தப்பித்து கொள்கிறார்கள்
அரக்கர்கள்.
அதற்கு காரணம்
அவள் கையில் திணிக்கப்பட்டிருப்பது
வெறும் அட்டைக் கத்தி தான்
என்பது
பரமனுக்கு மட்டுமே தெரிந்த
சூட்சுமம்.

தி.கலையரசி

# மாற்றி யோசி



- **எ**தற்கெடுத்தாலும்
  இமைகளை படபடவென
  மூடி மூடி திறக்காதே
  ஆயிரம் பட்டாம்பூச்சிகள்
  ஒரே நேரத்தில்
  உயிர்த்தெழுந்து விடுகின்றன......

- திரண்டிருக்கும் மழை மேகங்களுக்கு
  கருவிழிகள் எனவும்
  வானத்திற்கு உன் வெண்விழி படலங்களெனவும்
  பெயர் வைத்து விட்டால்
  என் மேனி வருடும் சாரல்
  உன் கண்ணீரா?? மழையின் மூலக்கூறா??

- மலையைப் போர்த்தி இருக்கும்
  பச்சையம் பூத்த புல்வெளிகள்
  பச்சை வண்ணம் பூசப்பட்ட
  உன் நீண்ட கூந்தலின் மாறுவேடம்.....

- கூடல் முடிந்த பிறகு
  மார் மீது தலை சாய்த்து
  நீ தரும் தொடர் முத்தங்கள்
  மழை முடிந்த பிறகும்
  இலை சேர்த்து வைத்திருக்கும்
  மிச்சத்துளிகள்.....

- யாருமில்லை என்பதை
  ஊர்ஜிதம் செய்து கொண்டு
  மெலிதாக ஆடும் உன் நடனத்தின்
  பிரதிபலிப்பு தான்
  தோகை விரித்தாடும் மயில்....

- மெலிதாக நடக்கும் போது
  கேட்கும் உன் கொலுசொலிகள்
  மெலடி பாடல்களாகவும்
  குதித்தோடும் போது
  கேட்கும் கொலுசொலிகள்
  துள்ளலிசை பாடல்களாகவும்
  ஒலித்துக் கொண்டிருக்கின்றன
  பண்பலை எங்கும்.....

- உன் ஒரு முத்தம் பகல்
  இன்னொரு முத்தம் இரவு
  முத்தம் தருவதை மட்டும் மறந்துவிடாதே
  சிதைந்து போகும் இவ்வுலகு....

- நீ பிறந்த பிறகு பிறக்கும்
  அழகான பெண் பிள்ளைகளுக்கு
  உன்னைத்தான் மாடலாக வைத்திருக்கிறானாம்
  பிரம்மன்.....

- நெற்றியையும் கண்களையும்
  அழகான நேர்த்தியில்
  பிரித்து வைத்திருக்கும்
  உன் புருவங்களை பார்த்து தான்
  கல்லணை கட்ட
  யோசனை தோன்றியதாம்
  கரிகால சோழனுக்கு.....

- யாசகம் கேட்பவர்களை பார்த்ததும்
  மிக மிக இயல்பாய்
  நீ செய்யும் ஈகை
  பூமி கேட்காமலே
  மழையை பொழியும் வானம்......

♪ **பிரபுசாங்கர் க**



**ச**ந்தர்ப்பம் கிடைத்தால்
வளைந்து திரும்பி
தாக்கவோ தப்பிக்கவோ
வாய்ப்பமைந்துவிடுகிறது
குதிரை வீரனுக்கு.

நேரெதிராய்
வலம் இடமாய்
துவம்சம் செய்கின்றன
யானைகள்.
வீழ்வதைக் காட்டிலும்
வீழ்த்தும் வலிமையே
அதற்கிருக்கிறது.

அடுத்தவர்
ராஜ்ஜியத்தை கவிழ்க்க
வழக்கம்போல்
குறுக்கு வழிகளில்
நுழைந்து திரும்புகிறார்கள்
அமைச்சர்கள்.

மன்னனை காப்பதே
நோக்கமென்றாலும்
அதிகார ரதத்திலேறி
அறுபத்து நான்கு மூலைகளையும்
ஆடிக் களிக்கிறாள்
ராணி.

பின்னால் மறைந்து
ஆணைகளிட்டு
தன்னையும் சேர்த்தே
கோட்டையைக் காப்பதில்
மன்னனின் கவனம்.

முன் செல்லவோ
பின் வாங்கவோ
தாக்குதல் நடத்தவோ
தப்பிக்கவோ
அதிகாரம் இருப்பவனுக்கே
அதிகமாய் வாய்க்கிறது
சந்தர்ப்பங்கள்.

போர் முடிந்து கூடாரம் சுருட்டி
சென்ற பின்பும்
அடுத்த யுத்தத்தை
தொடங்கும் போதும்
பலிகொடுக்க மட்டுமே
நிறுத்தப்படும்
சிப்பாய்கள் குறித்து
பெருமிதமாய்ச் சொல்ல
வரலாறு முழுக்க
எதுவும் இருந்ததில்லை.

♪ சந்துரு ஆர்.சி



ஒரு பட்டம் உயர்ந்துகொண்டிருக்க
நூற்கண்டு மெலிகிறது
காற்றின் திசைகள் மாறுகின்றன
தரையிறங்கும் பட்டத்தின் வேகம்
படிப்படியாக அதிகரிக்கிறது
நூல் கண்டு மீண்டும்
உருவெடுத்து அடுத்த நகர்வில்
பட்டத்தை உயர்த்த
எப்போதும் சலிப்படைவதில்லை !

**கா.ந.கல்யாணசுந்தரம்**

மரத்தின்
வட்ட வட்டமான
இடுக்குகளில்
ஒழுகிய வெயில்
தரை முழுவதும்
சூரியன்களை சுட்டு
வைத்திருக்கின்றன

**ச.ஜெய்**



மீன்களின் சுவை தெரியும் யாருக்கும்
நீந்துதலின் சுவை தெரியாது

ஒரு கைப்பிடி நதியை
என் உள்ளங்கைகளுக்குள்
தேக்கி வைத்திருந்த சமயம்

வானமும் கடலும்
கூடிக்களிக்கின்றன

கத கதப்பான மீன்குஞ்சுகளின் செதில்கள்
விரல்களை பரிவாய் உரசிச் செல்கின்றன

நுனி நதியில் அட்சரம் எழுதிப்போகும்
நீர் பூச்சிகளும்

சுழலில் கிறு கிறு வண்ணம்
சுற்றும்
முதிர் சிறகுகளும்

அலை நெளிவுகளில்
புனல் நாட்டியம் பழகும் நீர் பாம்புகளும்

படித்துறையில் வெண்பட்டு விரிக்கும்
நுரைப்பூக்களும்

கரையில் நிற்கும் ஒருவனுக்கு
கடவுள் சாட்சியாய்
நதியை தாரை வார்த்துக் கொடுக்கின்றன

♪ **தங்கேஸ்**



நீங்கள் உடைக்கப்படலாம்,
நீங்கள் சபிக்கப்படலாம்,
நீங்கள் பழிக்கப்படலாம்...
ஏதோ ஒரு தினத்தில்
யாரோவின் பிழையை
உங்கள் முதுகில் சுமத்தப் படலாம்..
உங்களின் ஆயிரம் புண்ணியங்கள்
ஒரேயொரு புல்நுனித் தவற்றில் மூழ்கடிக்கப்
படலாம்...
உங்களது அன்பின் மயிலிறகு,
சிலரால் மலையளவு பாரமென தூற்றப்படலாம்...
நம்பிக்கையெனும் துளசி மாடத்தில்
அமிலம் வார்த்தது,
உங்களது பேரன்பின் ஆணிவேராக இருப்பவரின்
கைகளாக இருக்கலாம்...
இருக்கட்டும்... இருக்கட்டுமே!
அவர்களின் கையில் ஒரு குவளை இளநீர்
கொடுத்துச் செல்லுங்கள், திரும்பிப் பார்க்காமல்...
கண்டுகொள்ளப் படாது குப்பையில் வீசிய
மயிலிறகை,
மீண்டும் எடுத்துக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்,
மீண்டுமொரு மயிலிறகை கொடுக்க
வேண்டாமென்ற முடிவோடு...
புல்நுனித் தவறில் மூழ்க வேண்டிய
அவசியமென்ன???
புண்ணியங்கள் புதுப் படகாய் வரும்போது...
யாரோவின் பிழையை சுமப்பதில்
வருத்தம் வேண்டாம்...
நிமிருங்கள்,
அது தானாய் விழுந்துவிடும்...
பழிக்கப்படுவதில், சபிக்கப்படுவதில்,
உடைக்கப்படுவதில்,
இயல்பு திரியாமல் இருங்களேன்,.,
உறுதியாக ஒரு நாள் உங்களை நீங்களே
தொழுவீர்கள்.,

தமிழ்கவிராஜன்



காஃபி யென்றால்
எனக்கு அவ்வளவு பிடிக்கும்.

எப்படிப்பட்ட டென்ஷனாக
இருந்தாலும் ஒரேவொரு
காஃபி போதும்.

சொல்லப்போனால்
நானோரு காஃபி பைத்தியம்.

இன்று காஃபிடேவாம்.

இந்த வாழ்க்கையில்
எண்ணிப்பார்க்க முடியாதளவிற்கு
காஃபி குடித்திருப்பேன்....
ஆனால்
அந்த அழகான காலையில்
நீ வந்து எழுப்பி கொடுத்த காஃபிதான் இன்று
சட்டென்று நினைவுக்கு வருகிறது.

எனக்கு காஃபியைவிட
உன்மீதுதான் அதிக பைத்தியம்
போலும்.

வாழ்க்கையில் நானருந்திய
எல்லா காஃபியிலும் இனிப்பு
கலந்திருந்தது.....
நீ கொடுத்த காஃபியில்தானே
காதல் கலந்திருந்தது
கண்ணம்மா.

நீ கொடுத்த காஃபியை
நான் இவ்வளவு காதலித்திருக்கிறேனென்றால்
உன்னை
எவ்வளவு காதலித்திருப்பேன்....
என்றாவது
நினைத்துப் பார்த்திருக்கிறாயா
கண்ணம்மா?

♪ நட்சத்திரப்பாடகன்

# கஸல்



**எ**ப்படி சபிப்பது
கருணையில்லா மரணத்தை

வாழ்வின் வலியுணர
உடலோ இதயமோ
உண்டா என்ன சாவிற்கு

இம்மியளவேனும்
காதலை தரை தட்டா கப்பலை
கரைமீட்பதெப்படி

இதயம் உணர்வதில்லை ஒருபோதும்
காதலும் கைவிடலும்
தொப்புள்கொடி உறவென்பதை

யாரிடம் யார் சொல்வது
கடைசி அலையின் தாகத்திற்கும்
மரணம்தான் கரை எனினும்
தணியாத வேட்கையை

நிலவென்றாலென
கதிரென்றால்தான் என்ன
உயிரின் நிழலும்
கறுப்பாய்த்தான் விரிகிறது

நானே நிராகரித்துவிட்ட தோட்டத்தில்
யாரின் மலர்வளையத்திற்காக
எனது கல்லறை

கோ. பாரதிமோகன்



**வா**னப்போர்வையை இழுத்து
உறங்க முயல்கிறேன்

ஓரத்தில் கடல் நனைத்திருந்த நீர்த்திவலைகள்
முகத்தில் சொட்டித் தூக்கம் கலைக்கின்றன

அடுத்த முறை கடலைப் புறங்கையால் தள்ளி
வைத்து வானத்தை மடிக்க வேண்டும்

போர்வையை உதறினால்
உள் சுருண்டு பூனை போல் விளையாடிக்
கொண்டிருந்த
நிலாவும் நட்சத்திரங்களும்
பூச்சிகளாய்
மேல் விழுகின்றன
உதறிப் போர்த்த வேண்டும்

மேகப்பஞ்சுகளை நன்றாகவே தலையணைக்குள்
திணிக்க வேண்டும்
சிதறி தும்மலை வரவழைக்கின்றன

எனக்கு கைவலிக்குமென
மழை வந்து வானத்தை துவைத்துப் போட்டுப்
போனது
கூலி என் வதனத்தின்
மலர்ச்சி என்கிறது

தினமும் ஒரே வண்ணத்தில் போர்வை போர்த்த
பிடிக்கவில்லை
வேறு வானமும் கிடைக்கவில்லை

நிறமாமாவது மாற்ற வேண்டும்
ஆற்றில் கழிவு
கலக்காத நல்ல
சாயப்பட்டறை தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன்

வேடிக்கை பார்த்தபடி
தாய்மடிப் பிள்ளையாக
முந்தானை பிடித்தபடி
கூடவே வருகிறது வானம்

♪ **பூங்கோதை கனகராஜன்**

# வண்ணத்துப்பூச்சியின் சிறகுகள்



ஒவ்வொரு முறை
வண்ணத்துப்பூச்சி பிடிக்க
கிளம்புகையிலும்
பக்கத்தில் மாமா இல்லையென உறுதி
செய்து செடிகள் பெயர்ப்போம்..

அத்தை இறந்தபின் அநேகமாய்
எங்களுடனே இருக்கும் மாமாவை
வேலை இல்லையென
ஆப்பக்கடை பாட்டியும்
மாமாவின் மகள்களும்
கத்திகொண்டே இருப்பார்கள்..

இரண்டு மூன்று நாட்களாக
அவரில்லாமல்
நிம்மதியாக திட்டுக்கள் தொலைத்து
நூல் கட்டி பறக்க விட்டோம்..
குடுவையில் அடைத்து வைத்தோம்..
சிபாரிசுக்கு ஒருவருமின்றி
பாவமாய் அவைகள் கெஞ்சி கொண்டிருந்தன..

தூரத்தில் மாமா தென்பட்டதும்
அவசரமாய் விடுதலை செய்து
பறக்க விட்டோம்..
முடி திடீரென கருப்பாகியிருந்தது
புதிய சேலையுடன் ஒரு
அழு மூஞ்சி அக்கா..

உற்றுப்பார்க்கையில்
வண்ணத்துப்பூச்சியின்
இறக்கைகள்
அந்த அக்காவிற்கு முளைத்திருந்தன.

ச.ஆனந்தகுமார்



**எ**ன்னை யாரும் பைத்தியம் என்றழைப்பதிலோ
என் காதலை யாரும் பைத்தியக்காரத்தனம்
என்பதிலோ
எனக்கெந்த மனக்குறையும்
இல்லை

பைத்தியமாய் இருந்து விடுவதில்
யாருக்கும்
பல சௌகரியங்கள் உண்டு

பைத்தியங்கள் தங்களை யாரிடமும்
நிரூபிக்கத்தேவையில்லை

பைத்தியங்கள் எதற்கும் யாரிடமும் சமரசங்கள்
செய்துகொள்ளத் தேவையில்லை

பைத்தியங்கள் எவரிடமும் எதையும்
விளக்கமளிக்கத்தேவையில்லை

இன்னும்
பைத்தியங்களால்தான் உங்களை
எந்த எதிர்பார்ப்புமின்றி நேசிக்க முடியும்
பைத்தியங்களால்தான் உங்களுக்காக
சுடும் பாலையின் நடுவே கால் கடுக்கக் காத்திருக்க
முடியும்
பைத்தியங்களால்தான் எந்தத் தொலைவிற்கும்
உங்களைத் தேடிவர முடியும்
பைத்தியங்களால்தான் காதலெனும் சூதாட்டத்தில் தம்
வாழ்வையே துணிந்து பணயம் வைக்க முடியும்

உண்மையில்
உங்களின் மேல் ஒருவர்
பைத்தியமாய் இருக்கிறார்
எனில்
விட்டுவிடாது
இறுகப்பற்றிக்கொள்ளுங்கள்
அவர்களை

பைத்தியங்கள்
யாரையும் அவ்வளவு எளிதில் நேசித்திடுவதில்லை
எல்லோராலும் பைத்தியமாய்
யாரையும் நேசித்திடவும்
முடிவதுமில்லை

ரிஸ்கா முக்தார்



- பறக்கும் இறகுகள்
  ஊதி விளையாடும் வாயில்
  சிக்கன் வாசனை

- தொடரும் விக்கல்
  நிற்காமல் நீண்டுகொண்டிருக்கும்
  உறவுகளின் நினைவு

- பேருந்து வரட்டும்
  அதுவரை இருக்கவே இருக்கிறது
  சமத்துவக் கூடம்

- இடிந்த சுவர்
  சரியாக மறைத்திருக்கும்
  அரைநிர்வாண போஸ்டர்

- நாற்பதில் காதல்
  தாஜ்மஹால் கலக்காமல் சுவைக்கிறது
  பேரன்பு

- தந்தையுடன் பைக் பயணம்
  முன்னால் இருக்கும் பிள்ளைக்கு
  அப்பாவின் கரங்களே சிறகுகள்

- படிப்பு முடிந்தது
  இன்னும் மீட்கப்படவில்லை
  அம்மாவின் தாலி

- நம்பிக்கை இழப்பு
  தவிர்க்க முடியாத வளர்ச்சி
  மூடநம்பிக்கை

- தொடர் தோல்வி
  பில்லி சூனியமாகவும் இருக்கும்
  பொய்க்கும் நம்பிக்கை

- மேயும் ஆடுகள்
  பசியாறி விடுகின்றன
  தாகத்துடன் மேய்ப்பன்

**கா.ரஹ்மத்துல்லாஹ்**

# என் வயது 120



120 வயதெனக்கு இப்போது

சுருக்கமற்ற தோல்
பொய்யுரைத்தது வயதை

சற்றே அதிகமான நரையும்
தோற்றது நிரூபிக்க

காதருகிலும் மனதருகிலும்
கூட்டிவந்தன
கடற்காற்றலைகள்

மறந்துபோன பெயர்கள் மற்றும்
ஏதேதோ சிலவற்றை
இன்னொன்றையும் சொன்னது
இந்த நீள் கப்பற்பயணம்

கடலில் மிதந்தன
என் சிந்தப்பட்ட கனவுகள்
வழிய வந்தன
எனை நோக்கி
என் வலைக்குள்ளும் தூண்டிலுக்கும் சிக்கி

அலைகளில் மிதந்த கடவுள் சொன்னார்
கனவுகளிலும் பெயர் பொறிக்கப்பட்டதாக

அவரும் என் வலைக்குள் சிக்கியதறியாமல்
என் குழந்தைமை முதலே

ரா.ராஜசேகர்



“அப்பா வாங்குன ட்ரங்க் பெட்டி
அப்பா நினைவா
இருந்துட்டுப் போகட்டும்“
“நீ பொறந்தப்ப தச்ச ஸ்வட்டர்
நினைவா இருந்துட்டுப் போகட்டும்“
“என் கல்யாணச்சீர் பித்தளை அண்டா
கல்யாண நினைவா இருக்கட்டும்“
இப்படித்தான் ஏதேதோ நினைவாக
எதையுமே கழிக்கவிடாமல்
ஆண்டாண்டு காலமாக
சேர்த்துவைப்பாள் அம்மா...
சேமித்தவற்றில் பல
யார் நினைவாக இருக்கிறதென்பதே
மறந்துபோனது எனக்கு
நினைவுபடுத்திச்சொல்ல
தற்போது அம்மாவுமில்லை...
இப்படித் தலைமுறை கடந்து
சேர்த்த பொருட்களை
தேவையற்ற குப்பைகளை
இனியாவது கழிக்கலாமென
பரணில் ஏறினால்
அத்தனைப் பொருட்களையும்
தன் இழைகளால் இழுத்துப் பிடித்தபடி
சிலந்திப் பூச்சியொன்று பார்க்கிறது
அம்மாவின் பார்வை போல...

♪ வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



**பி**ன்னிரவில் தோன்றும்
புலம்பல்களை
ஒளித்து வைப்பதற்கு
ஒரு இரவு போதாமல்
இருக்கும்

நேற்று எங்கேயோ
மறைந்து போன
இன்பத்தின் சாயல்களின்
நினைவுகள்

நிகழ்காலத்தின் ஆன்மத்தில்
இருளைவிட
கனதியானது

கொட்டித் தீர்க்கப்பட்ட
கண்ணீர்களுக்குப் பின்னால்
வரும்

பெருமூச்சுகள்
மட்டும் இல்லையென்றால்
ஒரு விடியல்
அப்படியே
கானல் நீராகிப்போகும்...

சுமைல் ஹரீஸ்



**கா**ற்றில் தடதடத்த தகர போர்டு
பெயர்பலகையில்லை;

வாசலில் மரக்கண்ணாடி
அலமாரியில்லை;
அதற்கிந்தபக்கம்
இலகுவாய் முழங்கையூன்றி
நிற்குமந்த சௌகர்யமில்லை;
கசகசத்த வியர்வை வழிய
முண்டா பனியன் லுங்கி கடைபையன்களிலில்லை;
அந்தரத்திலிருந்து தொங்கி
தீர்ந்தபடியிருக்கும்
சணற்கண்டில்லை;
பொட்டலம் மடிக்க
தந்தி தினமணியில்லை;
மூட்டையிலிருந்து பருப்பள்ளி
முள் பார்த்த தராசில்லை;
கீழிருந்து பெருத்து மேலே சிறுத்திருக்கும்
எடைக்கற்களில்லை;
பிரதான முகத்தலளவை ஆழாக்கில்லை;
காதில் சொருகிய மரகட்டை
பேனா சகிதம் துரிதமாய்
பில் போட்ட "கணக்கு"தர்மனில்லை;
தென்மேற்கு மூலை சுவற்றில்
"சேர்மன் ஐயா துணை"
என எழுதிய கல்லா பகுதியில்லை;
அதிலமர்ந்து வாஞ்சையாய்
"வா கண்ணு"என அழைத்து
உள்ளங்கையில் ஒரு
பிடி முந்திரி திராட்சை
திணித்த பால்பாண்டி நாடாரில்லை;
மற்றபடி யாதொரு பொல்லாப்புமில்லை
இந்த பி.பி.என் சூப்பர் மார்க்கெட்டுக்கு....

கோ.ஸ்ரீதரன்



இன்றைய காலங்கள் முன்போலில்லை
இரவில் நாய்கள் குறைப்பதில்லை
ஆந்தைகள் அலறுவதில்லை
சுவர்க்கோழிகளின்
சத்தங்களில்லை
காலைக் காகங்கள் கரைவதில்லை
விடியும்பொழுதே
கைகளில் உலகம் விரிந்துவிடுகின்றது
காதலோடு கண்கள் சந்தித்துக்கொள்வதில்லை
அரசியல் சினிமா சின்னத்திரைகள்
ஆளுகின்றன
குழந்தைகளையும் பெரியவர்களையும்
பாலுணர்வுகள் சூழ்ந்துகொள்கின்றன
வயதும் ஏற்பும் பார்ப்பதில்லை
அமைதியாக அமர்ந்துகொள் போதிமரங்கள்கூட
இல்லையென்று வருந்தாதே
எல்லாமே உன்னைக் கடந்து சென்றுவிட்டன

**லக்ஷ்மி**

சொற்களைக் கலைத்துப்போட்டு
சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கிறது காலம்
மிச்சம் மீதம் ஏதுமின்றி
மகிழ்வான தருணங்களை அபகரித்தவாறு
ஏனோ துயரங்களை மட்டுமே பரிசளித்துச்செல்கிறது
முயல முற்பட்டு
முன்னெடுத்துவைக்கும் அடிகளை
தட்டிவிட எத்தனிக்கும் சூழல்களில்
கவனம் கொள்ள வேண்டியிருக்கிறது
ஏனென்றும் எதற்கென்றும்
வினாக்களை எழுப்பாமல்
எதையும் செய்திட முடிவதில்லை
உதைபடும் பந்தாகிட விருப்பமில்லை
முன்வாழ்ந்தோர் சொல்லிச்சென்றவை
அத்தனையும் அனுபவம் என ஏற்றால்
இந்த பரமபத வாழ்க்கையில் ஓரளவேனும்
பாம்புகளிடமிருந்து தப்பிக்கலாம்.

**மயிலாடுதுறை இளையபாரதி**

# முன்புபோல்
# நான் இல்லை...



யாரோ ஒருவர் போல

எப்பொழுதாவது குறுஞ்செய்தியில் நீ வந்து போன
வலிகள் எனக்குள் அடங்கிப்போனது...

ஏளனம் செய்த

எதிர்பார்ப்புகளை இப்பொழுதெல்லாம் நான்
ஏறெடுத்தும் பார்ப்பதில்லை...

கொஞ்சம் கொஞ்சமாக
என்னை தொலைத்து,
புதிதாக மாற்றிக்கொண்டேன் என்னை...

கதறி அழ தோன்றும்
நேரங்களில் விழி மூடி

உன் விரல்
பற்றிக்கொண்டவையெல்லாம், நான் கண்ட
கனவென்று கலைந்து போனது...

மாறுதல்கள் என்னிடமே
மாற்றங்கள் உன்னாலே...

இறுதியாய் மீதம் இருப்பது
ஒன்று தான்
எழுத்துக்களிலெல்லாம் நீ தான்
நிறைந்திருக்கிறாய்...

நீ இல்லா கவிதையொன்றை எழுதுவதற்கு
முயற்சிக்கிறேன்

பிழையில்லாமல்...

ரத்னா



**அ**டிக்கடி சென்று வருவேன்
என் இரு சக்கர வாகனத்துடன்
அந்த பெட்ரோல் பங்கிற்கு
என்றும் இல்லாத பெட்ரோல் நெடியுடன் அன்று
வீசியது ராஜாவின்
கொடியிலே மல்லிகை பூ வாசம்
என் எதிரே
நெற்றி பொட்டு கமழும்
என் வயதை ஒத்த ஒருத்தி
தன்னை மறந்து வாய்விட்டு
இசை முடிந்த இடத்திலிருந்து பாடத் துவங்கினாள்
என்னை கண்டவுடன்
அவளுக்கு ஒரு சிறு பதட்டம்
தன் நாவினை பற்களால் கடித்து கொண்டாள்
தலை குனிந்து புன்னகைத்தாள்
நாணம் கொப்பளிக்கும்
அவளின் கண்களால் என்னை
கண்டபடியே தன் இரு சக்கர வாகனத்தை மெல்ல
கடத்தினாள்
தெரியவில்லை
தலை திருப்பி அவள் மறையும் வரை
அவளின் திசையையே பார்த்துக்கொண்டிருந்தேன்
அவளின் எதிர் பாலினம் நான்
இல்லையென்றாலும்
அவள் பாடிய வரிகளில்
கொஞ்சம் உண்மையிருந்தது
போலவே அப்பொழுது நிகழ்ந்தது
“மனசு தடுமாறும் அது நினைச்சா நிறம் மாறும்“

♪ சரண்யாசத்தியநாராயணன்

# ஒரு கோப்பைத் தேநீர்



உந்தன் நினைவுகளின்
மிச்சங்களையும்
சொச்சங்களையும் தவிர
வேறென்ன பெரிதாய்
இருந்துவிடப் போகிறது
ஒரு கோப்பைத் தேநீரில்...

இளஞ்சூட்டாய்
சின்னஞ்சிறு மிடறுகளாய் இதமாய்
உள்ளிறங்கும் ஒவ்வொரு மிடறுகளிலும்
உனக்கான கவிதையொன்று
உதயமாகி உள்ளத்தை உருக்குதடா...
உள்ளம் கவர்ந்தவனே..
ஒரு கோப்பைத் தேநீர் போதாதா
உனக்காய் ஓராயிரம் கவிதைகளைப் படைத்திடவே...

ஒரு கோப்பைத் தேநீர்
உன்னையும் என்னையும் நம்மையும்
நம் மௌனத்தையும்
கரைத்து நிரம்பிய
தேநீர் பொழுதுகள் இதோ...
தேநீர் பருகும் இடைவெளிகளில்
முதல் மிடறுக்கும் அடுத்த மிடறுக்குமிடையில்
தொண்டைக்குழிக்குள் தொடர்ந்திடவியலாமல்
தொக்கி நிற்கிறது நின் நினைவுகள்...

வெற்றிடமான தேநீர்
கோப்பைக்குள் குடிக்கொள்ளும்
ஏகாந்த பெருவெளியென
இலகுவாகியிருக்கிறது மனமும்..

சசிகலா திருமால்

# பழுப்பிலை ஓவியம்...



ஆள் அரவமற்ற அடவியில்
கலைத்து கலைத்து
வரைகிறது காற்று
பழுப்பிலை ஓவியம் ..!!

ஜனனி

அலங்கரித்து
ஆடை களைகிறாள்
மேகம்

அர்ச்சனையின்றி
வீதி ஊர்வலம்
மழை

எல்லாம்
முடிந்து விட்டதாய்
மௌன விரதம்
குடை

பந்தி
முடிந்தப்பின்
பட்டையிடுகிறாள்
வானவில்

ராஜாஅபி



**ஓ**ங்கி அறையும் வேகம் எடுத்த காற்று
அலைவரிசைகளும்....

பாதங்களைக் கவ்வி செல்லும் கூச்சலிட்ட நதியின்
வலசைப் பயணமும்...

நாசியை துளைத்ததுவிட்டுச் செல்லும்
மொட்டவிழுந்த மலரின் மகரந்தமும்...

கவன ஈர்ப்பு கேட்டு தலைதட்டி விழும் அடவியல்
கிளையின் பிடிப்பில் விடுபட்ட முதிர்ந்த
இலையும்...

இயல்பாகவும் அழகியலாகவும் அவை
அகிம்சாவாதியென்றே நம்பி இருக்கிறோம்
இத்தனை காலம்..

குறும்புத்தனங்களுக்கு
கைதேர்ந்தவை என்றே அறியாமல்...

♪ **மெகராஜ் பேகம்**

**மு**ன்பெல்லாம்
என்னைக் கண்டாலே
துரத்திக்கொண்டிருக்கும்
நாயொன்று,
இப்போதெல்லாம் துரத்துவதில்லை,
பிஸ்கட் ஒன்றை வீசி
அதன் பசியை துரத்திக்கொண்டிருக்கிறேன்...

♪ **மு.முபாரக்**

# நேசச்சிமிட்டல்



**வி**டுப்பின்றி உழைக்கும் தெய்வங்களாய்க்
கொட்டுகின்றன சொற்கள்

பிச்சுப்பூவும்
செம்மண்ணுடன் செவ்வரளியும்
ஆவாரையும் மணக்கிறது
கதம்பமாய்

பனித்துளி போர்த்திய
பச்சையமாய்த் துளிர்க்கின்றன
பெரு நேசங்கள்

கட்டைவிரல் நகக் கண்ணுள்
செம்மை பூக்க
அண்ணாந்து பார்க்கிறேன்
கனவோயென

இரவில்
கிழக்கிலிருந்து தூதுவந்த
நட்சத்திரம்
இல்லையெனக் கண்சிமிட்டிச் சிரிக்கிறது
அலரியின் மேற்கில்.

♪ பிரியா பாஸ்கரன்



காகங்களின் எல்லா கரைதல்களும்
எப்போதும்
ஒன்று போல் இருப்பதில்லை
சுருதியைக் குறைத்தோ கூட்டியோ
அல்லது
தொடர்ச்சியான கரைதல்களிலோ
தெரியப்படுத்திவிடுகிறது
அதன் தேவையை
இரையேதும் கிடைக்காத நாளில் மட்டும்
இப்படி உரிமையோடு
எங்கள் வீட்டுப் படியேறி
கரைதலில்
உணவு யாசகம் கேட்கும்
இந்த காகத்தை
எப்படி அனுப்புவது
வெறுங்கையுடன்

மகேஷ் சிபி

தினமும் கைகழுவுகிறேன்
ரோஜாவை நீட்டுகிறது
முள் செடி...

ஐ.தர்மசிங்



**நி**ல்லாமல் சுழன்றோடும்
இக் காலச்சக்கரத்தில்
எவ்வளவு அசால்ட்டாய்
நிகழ்ந்து விடுகிறது
ஒரு சந்திப்பும்
ஒரு பிரிவும்

இக்கால வெளியில்
யாரும் யாரையும்
சந்திக்கலாம்
கைகுலுக்கிக்கொள்ளலாம்
அதிலெந்த நிபந்னைகளுமில்லை

ஆனால்
ஒருவருக்கொருவர்
பாரமாகிவிடாமல்
ஒருவருக்கொருவர் வாக்குறுதியளித்திடாமல்
ஒருவருக்கொருவர்
அன்பினை பகிராமல்
ஒருவர் நினைவில் ஒருவர்
தங்கிவிடாமல்
ஒருவரை ஒருவரையொருவர்
பழி கூறாமல்

பிரியநேருகையில்
எளிதாக
பிரிந்துவிட வேண்டும்

நீயென்னைப் பிரிந்ததைப்போல்
நானுனக்கொரு பொருட்டாக
இல்லாமல் போனதைப்போல்

இருந்தும்
உன் வாழ்வில்
நானில்லாமல் போன
ஒரு
வெற்றிடத்தை
யாரால்தான் நிரப்ப முடிந்தது

உன்
நினைவிலிருந்து
எனை அழித்துவிடும்
கைங்கரியம் யாருக்குத்தான்
தெரிந்தது

நீ எங்கோ
தூக்கிப்போட்ட என்னை
எவரால்தான்
அப்புறப்படுத்த முடிந்தது

இப்போது நீ

நம்
தீராப்பிரியங்களின் சாபங்கள்
தீர்ந்து போக
என்ன செய்யப்போகிறாய்?

மயிலிறகு மனசு

ஷிபானா அஸீம்

# தேன் மிட்டாய்



அரிசி, உளுந்து மாவுடன்
செம்மஞ்சள் அல்லது
சிகப்பு நிற தூள் சேர்த்து
சிறிய சிறிய உருண்டைகளாகப்
பொரித்தெடுத்து
சர்க்கரை பாகில்
ஊறவைத்தெடுத்தால்
கிடைத்து விடுகிறது
தேன் மிட்டாய்கள்...

பள்ளிக்கூடங்களுக்கருகிலிருக்கும்
பெட்டிக் கடைகளுக்காகத் தான்
அதிகபட்சமாக
உற்பத்தி செய்யப்படுகின்றன
தேன் மிட்டாய்கள்...

சில தீண்டாமை தேன் மிட்டாய்கள்
இனிப்பதில்லை
மேலும்
தேன் மிட்டாயென்பது உண்மையில்
தேன்மிட்டாயேயல்ல...!

தங்கராஜ் பழநி

காரணங்கள்
தேடியே நீ
விலகினாய்..!!

உன்னை தேடும்
காரணத்தினாலே
நான் உன்னை
நெருங்குகிறேன்.!!

விலகுதல் உனக்கு
புதியதல்ல,,
வெற்றிடம் தேடும்
காற்று நீ .!!

எங்கு வேண்டுமானாலும்
உட்புகுவாய்.

எனக்குத் தான் தெரியவில்லை
நிறம் மாறும்
பச்சோந்தியாக.!!

மாலதி வெங்கடேசன்



காலக்கோடுகளில்
ஒலித்துக்கொண்டிருக்கும்
எல்லோரது நினைவுகளிலும்
மறைந்து கொண்டிருக்கிறது
நாணறுந்த வீணை
ஏந்திய
ஸ்வரம்
ஒன்று

குரல் பிசிற
உயிர் அறுக்க
ஒலிக்கும்
அந்தகாரத்தின்
எல்லையில்
நிற்குமது

எவராலும் ஒருபோதும்
இசைக்கமுடியா
அழுகையின் கானம்

இனி எப்போதும்
நினைக்கவே கூடாது
என்று நினைக்கும்
அந்தப் பாடலைத்தான்
எல்லோரும்
மீட்டிக்கொண்டிருந்தனர்

வேறு வேறு
நதியின் கரைகளில்
நின்றவாறு

ஒரே நிலவுதான்
எங்கும்
சிதறியிருந்தது
இருளையும்
ஒளியையும்
வாழ்வின் மீது

எல்லா
சாம்ராஜ்யங்களிலும்
ஒரு முடி
வீழ்ந்துதான்
இன்னொரு முடி
மகுடம் தாங்கியது

மதில்கள்
சூழ்ந்த
அகழிகளில்
மீந்திருக்கும் படிமங்களின்
தொன்மத்தின் எச்சங்களில் வடிந்துகொண்டிருக்கிறது
முதலையின்
பற்களில் இருந்து
வெளிப்பட்ட
குருதி அப்பிய
முடைநாற்றம்

திணவேறிய
தோள்களின் மீதூறும்
நம்பிக்கையை
யாருமறியாமல்
சிதைக்கிறது
பின் நிற்கும்
துரோகத்தின் சிறு முள் கூர்மை

செங் குருதியை ருசிக்கும்
செந்நாயின்
ஓலத்தினை
இதயத்தின் வழி
உணரும்
அறிவின் தடங்களில்
வரலாறு
அழுத்திப்
படைக்கிறது
மீண்டும்
ஒரு துரோகத்தையும்
அதை வெற்றி
கொள்ளும்
பிறிதொரு நம்பிக்கையின்
பிறியையும்

♪ மகிழினி காயத்ரி



**நா**ங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மாறி மாறி நலம் விசாரித்துக் கொள்வோம்...

சாப்பிட்டாயா என ஒருவரை ஒருவர்
கரிசனையோடு கேட்டுக் கொள்வோம்...

“அப்றம்“ , “ம்ம்“ என அடிக்கடி சொல்லிக்
கொள்வோம்...

என் எழுத்துக்களை அவனும் அவன் எழுத்துக்களை
நானும் கொஞ்சம் மெச்சிக் கொள்வோம்....

எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் பற்றி
எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிக்
கொண்டே இருப்போம்...

அதிலும் “மனுஷின்” கவிதைகளை உருகி உருகிக்
காதலிப்போம்...

நான் ஏதாவது பதிவுகள் இட்டிருக்கிறேனா என
அவனும்

அவன் ஏதாவது பதிவுகள் இட்டிருக்கிறானா என
நானும் அடிக்கடி பார்த்துக் கொள்வோம் ஆனால்
தற்செயலாக பார்ப்பதைப் போன்று பார்த்துவிட்டு
சப்தமில்லாமல் நகர்ந்திடுவோம்...

“குட் மானிங்”கோடு காலைகளை ஆரம்பிப்போம்

“குட் நைட்”களோடு இரவுகளை முடித்துக்
கொள்வோம்....

மற்றப்படி நாங்கள் இருவரும் காதலர்கள் எல்லாம்
இல்லை எங்களுக்குள் எங்கேயோ கொஞ்சம் காதல்
இருக்கிறது அவ்வளவு தான்.

♪ அருஸா ஜெவாஹிர்



உன்னை காணவேண்டுமென
தோணும் போதெல்லாம்
இந்த கடற்கரையில் தான்
வந்து நிற்கிறேன்...

விரல்களை பற்றிக்கொண்டு
இணைந்து நடந்திருக்க
வேண்டிய காலடி சுவடுகள்..

விழிகள் உரசிக்கொள்ள
இணைந்தே சிரித்திருக்க
வேண்டிய ஏதுமறியா உதடுகள்..

ஏக்கம் எதுவுமற்று
தோளில் சாய்ந்திருக்க
வேண்டிய மாலை பொழுதுகள்..

அலைகள் நனைத்த
பாதக்கொலுசை பார்க்க
வேண்டிய விஷம விழிகள்..

தொலைந்திருக்கிறேன் – நீ
தேடுவாய் என்று
தேடட்டும் என்று

வந்து வந்து போகும்
அலைகளை போன்ற உன்னை

தொடர்ந்திருக்கிறேன்
கொண்டு வந்த கனவுகளை
தொலைக்க மனமில்லாமல்...

♪ கே.பாலன் வடக்கத்தியான்பட்டி



**தி**ருமணம் முடிந்த மகள்
புகுந்த வீடு செல்லும் முன்னே
அப்பா என்றெழைத்து
மார்போடு சேர்ந்தென்னை
கட்டி அணைத்து கதறி அழுதாள்
பிரிவின் துயரம் தாங்காதவளாய்...

**எ**ன்னையும் அழுகை அசைத்துப்பார்த்தது
அதையும் தாண்டி
திருமணம் சிறப்பாக நடந்த
பரிபூரண திருப்தியுடன்
மனதெங்கும் நிம்மதி பரவி
ஒருவித சந்தோஷ உணர்வே
மெல்ல தலை தூக்கியது...

ஒரு கடமை முடித்த
பொறுப்பான அப்பாவாக
வீடு திரும்பினேன் மகிழ்வாக...

வீட்டில் நுழைந்தவுடன்
அப்பா! கை கால் அலம்பிட்டு
வாங்கப்பா டீ போட்டு தாறேன்
அப்பா! வெளியே போறியளா
குடை எடுத்துப்போங்கப்பா
அப்பா! வெயில் சுள்ளுனு அடிக்குது
தண்ணீர் பாட்டில் எடுத்துட்டு
போங்கப்பா
அப்பா! சட்டை கிழிஞ்சிருக்கு
வேற சட்டை போடுங்கப்பா...

எத்தனை எத்தனை அப்பாக்கள்
அத்தனையும் ரீங்காரமாய்
காதில் ஒலிக்க
வெறுமையான வீட்டைப்பார்த்து
அது வரை அடைந்திருந்த அழுகை
மடை திறந்த வெள்ளமாய்
உடைந்து வர
அறைக்கதவை அடைத்து விட்டு
குலுங்கி குலுங்கி அழுதேன்
ஒரு சராசரி அப்பனாக...

காட்டுவா ராபி.மு

# அந்த கேள்வி



**சு**கமான
இரயில் பயணம்.

சுவராசியம் கிட்டியது
பக்கத்து இருக்கையாளருடனான,
உலக அரசியல் சார்ந்த
அறிவார்ந்த பேச்சு.

ஒருமணிநேர பேச்சும்
வீணென்றாகிப்போனது,
அவர் வீசிய
அமிலம் தோய்ந்த கேள்வி,
“நீங்கள் எந்த சாதி?”

ஆ.சார்லஸ்

**நா**ன் பாதி அல்ல

பாதி நீ பாதி நான் என்றிருந்த காலம் ஒன்று
இருந்தது..
ஆதி காலம் அது..

விதியா சதியா என்று அறியேன்
விட்டகன்று கரைந்து போன
பாதி மெழுகுவர்த்தியில் இன்னும்
உருகிக் கொண்டிருக்கிறது
என் உயிர். ..

பாதி உடைந்த பொருட்களில் எல்லாம்
பாவி நானே தெரிகின்றேன்..

இருள் சூழ்ந்து கொண்டிருக்கும்
இதய அறைக்குள்
வெளிச்சம் தர ஒருவரும் இல்லா நிலையில்..
என்னிடமிருந்தே ஓர் ஒளி
புறப்படுகிறது..
அது ஆன்மிக ஒளி!

நான் இப்போது மீண்டும் முழுமையடைந்து
கொண்டிருப்பதாக
உணர்கிறேன்..

பவானி ரெகு


படைப்பு
சமூகத்தின் இணைப்பு
படைப்பு சங்கமம் - 2022
நூல் வெளியீடு
பரிசளிப்பு
விருதளிப்பு
15
சனிக்கிழமை
OCT
2022
சர்.பிட்டி.தியாகராயர் கலையரங்கம்,
ஜி.என்.செட்டி சாலை, தி.நகர்,
சென்னை - 600017
padaippu
admin@padaippu.com
www.padaippu.com